**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஐப்பசித்திங்கள் 17 ம் நாள்

**இ.ம.எண். 1/2025**

**in**

**அ.வ.எண். 11/2025**

தமிழ்நாடு கிராம வங்கி,
முத்தூர் கிளை,
ரெப் பை அதன் கிளை மேலாளர் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

K.ராஜேஸ்வரி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.10.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.விஜய், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.தேன்மொழி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர் வங்கியின் சார்பில் மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்து நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 3 விதி 2ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடந்த 24.02.2022 அன்று மனுதாரர் வங்கியில் கடன் தொகையை பெற்றுக்கொண்டு திரும்ப செலுத்த தவறிவிட்டார். அதனால் வாதியின் வங்கி சார்பாக மேற்படி கடன் தொகையை வசூலிக்க வழக்கு தாக்கல் செய்ய வாதியின் வங்கி மனுதாரருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. வாதியின் வங்கி மனுதாரருக்கு வழங்கிய அங்கீகராத்தின்படி மனுதாரர் தற்போது வாதி வங்கியின் கிளை மேலாளர் என்ற முறையில் மேற்படி வழக்கை தாக்கல் செய்ய மனுதாரருக்கு உரிமை உண்டு. எனவே வாதி வங்கியின் சார்பாக மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்து நடத்த அனுமதியளிப்பது அவசியமாகும். எனவே மனுதாரர் வங்கியின் சார்பில் இந்த வழக்கை மனுதாரர் தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) வாதியின் வங்கியிடம் பிரதிவாதி வியாபார கடன் திட்டத்தின் மூலம் கடன்தொகையாக ரூ.1,00,000/– கடந்த 24.02.2022ம் தேதி பெற்றார். ஆனால் மேற்படி கடன் தொகைக்கான வட்டி விகிதங்கள் மற்றும் இதர நிபந்தனைகள் போன்றவற்றையும் சீரான வட்டி விகிதத்துடன் கடன் தொகை செலுத்தப்பட வேண்டும் என்ற விபரங்களை வாதியின் வங்கியானது பிரதிவாதிக்கு தெளிவாக

கூறவில்லை. பிரதிவாதி வாதி வங்கியிடம் கடன் தொகை பெற்று கொண்டதற்கு பின்னிட்டு மாதம் தோறும் தவறமல் தவணை தொகையை செலுத்தி வந்தார். மேற்படி கடன் தொகையான ரூ.1,00,000/—ஐ வாதியின் வங்கியிடம் இருந்து பெற்ற பிரதிவாதி இந்த தாவா தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாக வரை ரூ.92,000/— தொகை மீண்டும் வாதி வங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

iii) வாதியின் வங்கியிடம் பெற்ற கடன் தொகையை பிரதிவாதி செய்து வந்த தொழில் நன்றாக இருந்த காலம் வரை எவ்வித இடையூறும் இல்லாமல் உரிய நேரத்தில் செலுத்தி வந்தார். பின்னிட்டு வந்த காலங்களில் பிரதிவாதி செய்து வந்த தொழில் சற்று முடங்கிவிட்ட காணத்தினால் பிரதிவாதி வாதி வங்கிக்கு திரும்ப செலுத்திய தொகை போக பாக்கி நிலுவை தொகை ரூ.8,000/— மற்றும் அதற்கு வட்டி தொகைளை பொறுத்து நிலுவையில் இருந்து வந்ததை புதிதாக கடன் டாப் அப் திட்டத்தின் மூலம் கடன்தொகை அதிகப்படுத்தி கொடுக்குமாறும் மேற்படி தொகையை வைத்து பிரதிவாதி செய்து நலிவடைந்துள்ள அவரது தொழிலை மேலும் விரிவுபடுத்தி கொள்வதாக பிரதிவாதி பலமுறை வாதி வங்கியிடம் அணுகி கேட்டதில் வாதியின் வங்கி பிரதிவாதிக்கு தொகை கொடுக்க முன்வராமல் இருந்து கொண்டும் பிரதிவாதி செலுத்த வேண்டிய பாக்கி தொகையை செலுத்த கோராமல் இருந்து வந்து பிரதிவாதி செலுத்த வேண்டிய பாக்கி ரூ.8,000/— கடனுக்கு கூடுதல் வட்டி விகிதங்களை கணக்கீடு செய்து ரூ.35,055.16/— தொகை செலுத்த வேண்டி தாவா தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

iv) வாதியின் வங்கியானது வேண்டுமென்றே பிரதிவாதியிடம் கூடுதல் வட்டி விகிதங்களை கணக்கீடு செய்து அதிகப்படியான தொகை வசூல் செய்ய வேண்டி மாறுபட்ட தேதிகளை வழக்குரையில் தெரிவித்து வழக்குமூலத்திற்காகவும் தாவா தாக்கல் செய்யப்படுவதற்காகவும்

ஏற்படுத்தப்பட்டுள்ளதாகும். பிரதிவாதி வாதியின் வங்கிற்கு பாக்கி தொகை ரூ.8,000/- மட்டுமே செலுத்தப்பட வேண்டும் என்பது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிக்கு தெரியாமல் சரிவர ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் கூடுதல் வட்டி விகிதங்களை விதித்து வழக்கு நடத்த அனுமதி கோரி அனுமதி மனுவுடன் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:-**

மனுதாரர்/வாதி தரப்பில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடந்த 24.02.2022 அன்று மனுதாரர் வங்கியில் கடன் தொகையை பெற்றுக்கொண்டு திரும்ப செலுத்த தவறிவிட்டார் என்றும் அதனால் வாதியின் வங்கி சார்பாக மேற்படி கடன் தொகையை வசூலிக்க வழக்கு தாக்கல் செய்ய வாதியின் வங்கி மனுதாரருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது என்றும் எனவே மனுதாரர் வங்கியின் சார்பில் இந்த வழக்கை மனுதாரர் தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் வாதியின் வங்கியானது வேண்டுமென்றே பிரதிவாதியிடம் கூடுதல் வட்டி விகிதங்களை கணக்கீடு செய்து அதிகப்படியான தொகை வசூல் செய்ய வேண்டி மாறுபட்ட தேதிகளை

வழக்குரையில் தெரிவித்து வழக்குமூலத்திற்காகவும் தாவா தாக்கல் செய்யப்படுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி வாதியின் வங்கிற்கு பாக்கி தொகை ரூ.8,000/- மட்டுமே செலுத்தப்பட வேண்டும் என்பது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிக்கு தெரியாமல் சரிவர ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் கூடுதல் வட்டி விகிதங்களை விதித்து வழக்கு நடத்த அனுமதி கோரி அனுமதி மனுவுடன் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாவா தொகையான ரூ.35,055.16/- கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கடந்த 01.08.2025 அன்று எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவானது மனுதாரர் தரப்பில் வாதி வங்கியின் சார்பாக அசல் வழக்கை தாக்கல் செய்து நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வாதியின் வங்கிற்கு பாக்கி தொகை ரூ.8,000/- மட்டுமே செலுத்தப்பட வேண்டும் என்பது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிக்கு தெரியாமல் சரிவர ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் கூடுதல் வட்டி விகிதங்களை விதித்து வழக்கு நடத்த அனுமதி கோரி அனுமதி மனுவுடன் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை இரு தரப்பு சாட்சிய விசாரணைக்கு பின்னிட்டு அசல் வழககின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியுமே தவிர இம்மனுவில் அதைப்பொறுத்து தீர்மானம் செய்ய இயலாது.

7. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின்படி அசல் வழக்கானது வாதி வங்கியால் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாவா கடன்தொகை கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தமது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேலும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் அசல் வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இறுதியாக தீர்மானிப்பதற்கும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2025.11.03 18:42:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2025.11.03 18:43:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.